11.06.2024

<u>கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமா்வு வழக்கு எண்.205/2018</u>

அ.சா.18

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | | |
| த/பெ | கலியபெருமாள் | | |
| **கிராமம்** | கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம் | **தொழில்** | |
| **தாலுக்கா** | விழுப்புரம் | **வயது** | 42/2024 |
| **மாவட்டம்** | விழுப்புரம் | **தேதி** | |

**இன்று உதவியாளர் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** விழுப்புரம் இரயில் நிலையத்தில் 4 வது நடைமேடையில் உள்ள பாலாஜிபாபு என்பவருக்கு சொந்தமான கேன்டீனில் வேலை செய்து வருகிறேன். கடந்த 14 வருடங்களாக அந்த கேன்டீனில் தான் வேலை செய்து வந்தேன். கடந்த 2014ம் ஆண்டு அன்று ஒருநாள் எப்போதும் நான் எங்கள் கேன்டீனில் உள்ள டிரை சைக்கிளை எடுத்துக் கொண்டு என் பணிக்கு வந்தேன். ஆனால் எங்கள் கேன்டீனில் கணக்கு புத்தகம் அதில் இருந்தது எனக்கு தெரியாது. அன்று பகல் சுமார் 11.30 மணியளவில் எங்கள் கேன்டீனில் வேலை செய்யும் விழுப்புரம் சித்தேரி கரையை சேர்ந்த துரை என்பவர் என்னிடம் வந்து ஏன் கணக்கு புத்தகத்தை டிரை சைக்கிளில் எடுத்து வந்தாய் என கேட்டு என்னிடம் தகராறு செய்தார். அவர் பேசிய விதத்தை கேட்டு நான் ஆத்திரம் கொண்டு அவரை அடித்து விட்டேன். அதன் பிறகு நான் விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் சென்று நடந்த சம்பவம் குறித்து வாய் மூலமாக அங்கு இருந்த போலீசாரிடம் சொன்னேன். அந்த போலீசாரை நான் அழைத்து கொண்டு வந்து எங்கள் கேன்டீன் அருகில் நின்று கொண்டிருந்த துரையை அடையாளம் காட்டினேன். அந்த போலீஸ்காரர் துரையை அழைத்து கொண்டு காவல் நிலையம் சென்றார். அந்த போலீஸ்காரரை பார்த்தால் நான்

அடையாளம் சொல்ல முடியும். சாட்சி 1ம் எதிரியை சரியாக அடையாளம் காட்டினார். பிறகு என் கேன்டீன் முதலாளி ஏன்டா ஒரே கடையில் வேலை செய்து கொண்டு ஏன்டா இப்படி செய்கிறீர்கள். புகாரை திரும்ப பெறுங்கள் என்று சொல்லிவிட்டார். அதன்பிறகு என் நண்பர் ரவி என்பவரை காவல் நிலையம் அழைத்து சென்று அவர் மூலம் புகாரை திரும்ப பெறுவதாக சொல்லி வழக்கை முடித்து கொண்டு நான் வந்து விட்டேன். ஆனால் துரை காவல் நிலையத்தில் தான் இருந்தார். நான் அன்று காவல்நிலையத்தில் வேறு யாரையும் பார்க்க வில்லை இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. சம்பவம் தொடர்பாக என்னை எந்த போலீசாரும் விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் இருந்து வந்து விசாரிக்கவில்லை.

(சாட்சியை பகுதி **பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.**)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

அன்றைய தினம் 06.05.2014ம் தேதி நான் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றபோது ஓடும் ரயிலில் புத்தகம் விற்கும் ஜெயவேலு என்பவரை காவல் நிலையத்தில் சங்கிலியால் கட்டி வைத்துவிட்டார்கள் என்றும் அதை நான் பார்த்தேன் என்றும், மறுநாள் 07.05.2014 ம் தேதி காலை 10 மணி அளவில் அந்த ஜெயவேலுக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது என்றும் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியில் இறந்து விட்டார் என்றும் கேள்விப்பட்டேன் என்று போலீஸ் விசாரணையிலும், நீதித்துறை நடுவர் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

4,5 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை இல்லை